**சாவகச்சேரி நகரசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 23 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆம் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சாவகச்சேரி நகரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்கவேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மின்சார செயற்பாடுகள் மின்சார சபைக்கு கையளிக்கப் பட்டிருந்தபோதும், மின்சார களஞ்சிய இருப்பு ரூபா 241,156 களஞ்சிய இருப்பில் இருந்து குறைக்கப்பட்டிருக்காமையினால் களஞ்சிய இருப்பு கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 16,375,000 பெறுமதியான 13 வாகனங்களை உரிமை மாற்றம் செய்யப்படாது பெறுமதி மதிப்பிடப்பட்டுக் கணக்குக்குக் கொண்டு வந்திருந்தமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 16,375,000 இனால் கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீள அறவிடப்பட்ட ரூபா 436,050 வருமானத்திற்கு மாற்றப் பட்டிருக்காமையினால் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையில் காணி விற்பனவு வரிப் பதிவேடு மீளாய்வாண்டின் போது பேணப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியினர் கடன் நிலுவை ரூபா 105,640 அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிடிபணம் ரூபா 838,802 உரிய ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படாமல் உள்ளது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| நகரசபைக் கட்டளைச்சட்டம் பிரிவு 44(2) | சபையின் வீதிகள் தொடர்பான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 38,737,070 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 32,567,828 ஆக இருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான நிதிப்பெறுபேறுகள் ரூபா 6,169,242 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 4,906,330 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 25,393,636 தொகை ஆக இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 20,487,306 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 105,438,065 விளைந்திருப்பதுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 81,331,735 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 24,106,330 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான நிர்வாகம்

### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2016 மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ஆதனவரிகள் | 6,551 | 7,491 | 10,218 |
| குத்தகை வாடகைகள் | 25,925 | 23,903 | 1,184 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 768 | 805 | 74 |
| ஏனைய வருமானம் | 63,662 | 66,775 | 59,638 |
| **மொத்தம்** | **96,906** | **98,974** | **71,114** |

### 2.4.2 ஆதனவரி

ஆதனவரி ரூபா 8,304,975 இன்றுவரை அறவிடப்படாதுள்ளது.

### 2.4.3 வாடகை

வாடகை ரூபா 63,700 இன்றுவரை சபையினால் அறவிடப்படாமல் நிலுவையாக உள்ளது.

### 2.4.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 74,400 இன்றுவரை சபையினால் அறவிடப்படாமல் உள்ளது.

### 2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,797,000 இன்றுவரை சபையினால் அறவிடப்படாதுள்ளது.

(ஆ) காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 48,026,181 முத்திரைக் கட்டணம் அறவிடப்படாதுள்ளது.

**2.5 மிகைக் கட்டணம்**

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு உரிய காலத்தில் அனுப்பப்பட்டிருக்காமையினால் ரூபா 72,039 தண்டமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. ஊழியர்களின் கவனயீனத்தினால் ஏற்பட்ட தண்டத்தை உரிய அலுவலரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய இலக்கம் பெறப்படாத ஊழியரது பங்களிப்பு ரூபா 49,026 உரிய ஊழியருக்கு திருப்பிச் செலுத்தாமல் வருமானமாக மாற்றப்பட்டுள்ளது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலுத்த வேண்டிய சம்பளங்கள் ரூபா 111,734 உரியவர்களுக்குச் செலுத்தப்படாது பதிவழிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் வைப்புக்கள் ரூபா 1,271,910 உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் 107 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 93 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் 16 பதவியினர் பற்றாக் குறையாகவும் 02 பதவியினர் மிகையாகவும் உள்ளனர்.

**3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

-----------------------------------------------------

சபையின் 02 வாகனங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது.

**3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------

பிலிசறு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திண்மக்கழிவுப் பொருள் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்த போதிலும் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சிக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

-------------------------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

**செலவினக் கட்டமைப்பு**

----------------------------------

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 36,068 தொடக்கம் ரூபா 9,849,354 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.